**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

பி **வா.சா. –5, கருப்புசாமி**

**நாள். 22.07.2025.**

பி.**வா.சா.5 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆறுமுக கவுண்டரை எனக்கு 40 ஆண்டுகளாக தெரியும். ஆறுமுக கவுண்டருக்கு நல்லம்மாள் முதல் மனைவி, மீனாட்சி 2வது மனைவியாவார். ஆறுமுக கவுண்டருக்கும் முதல்மனைவி நல்லம்மாளுக்கும் 3 பெண்மக்கள், ஒரு ஆண்மகன் பிறந்தார்கள். ஆறுமுக கவுண்டருக்கும் 2வது மனைவி மீனாட்சியம்மாளுக்கும் 2 பெண்மக்கள், 1 ஆண்மகன் பிறந்தார்கள். ஆறுமுக கவுண்டருக்கும் நல்லம்மாளுக்கும் பிறந்த ஒரே மகனான 1ம் பிரதிவாதி முத்துச்சாமி என்பவர் தஞ்சாவூரில் நிதிநிறுவனம் நடத்தி வருகிறார். ஆறுமுக கவுடண்டருக்கும் மீனாட்சியம்மாளுக்கும் பிறந்த ஒரே மகனான 1ம் வாதி ஒசூரில் இருக்கிறார். முத்துச்சாமியும் ராஜன்னாவும் சுமார் 50 ஆண்டுகளாக வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆறுமுக கவுடண்டர் அவரது பிள்ளைகளுக்கு சொத்துக்களை பிரித்துக் கொடுத்து விட்டார் என்றால் தெரியும். ஆறுமுக கவுண்டர் தன்னுடைய ஜீவனாம்சத்திற்காக ஒரு சொத்தை நிறுத்தி வைத்துக் கொண்டார் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் மூத்த மனைவி நல்லம்மாள் இறந்து 30 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். நல்லம்மாள் இறந்த பின்பு 2வது மனைவி மீனாட்சியம்மாள் அவருடைய மக்களுடன் இருந்தார் என்றால் ஆமாம். ஆறுமுகவுண்டருக்கு வேண்டிய சவரட்சணைகள் அனைத்தையும் அவரது மகளான 3வது பிரதிவாதி கலையரசி செய்து கலையரசியின் குடும்பத்துடன் இருந்து வந்தார் என்றால் தவறு. 2 வீட்டிலும் இருந்து வந்தார். தாவா சொத்து புளியமரத்துப்பட்டி கிராமத்தில் இருக்கிறது. தாவா சொத்து எத்தனை ஏக்கர் இருக்கும் என்றால் 16 ஏக்கர் 80 செண்ட் இருக்கும். 16 ஏக்கர் 80 செண்டை ஆறுமுக கவுண்டர் உயிருடன் இருந்த காலம் வரை அவர் மட்டும் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் தனது 16 ஏக்கர் 80 செண்ட்டை தனது பேத்தி பானுபிரியாவுக்கு உயில் எழுதி வைத்துள்ள விவரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. ஆறுமுக கவுண்டர் இறந்தபிறகு அந்த இறுதி சடங்கில் அவரது பிள்ளைகள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றால் தவறு. கலந்து கொண்டார்கள். எனக்கும் 1ம் பிரதிவாதி முத்துச்சாமிக்கும் எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 40 ஆண்டுகளாக பழக்கம். ஆறுமுக கவுண்டர் இறந்த பிறகு கலையரசியை தவிர வேறு யாரும் இறுதிச் சடங்

கலந்து கொள்ளவில்லை என்றும் கலையரசி மட்டுமே ஆறுமுக கவுண்டருக்கு இறுதி சடங்கு செய்தார் என்று சொன்னால் தவறு. தாவா சொத்துக்கு அருகில் எனது சொத்து உள்ளது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான அந்த சொத்தின் சர்வே எண். 1102 ஆகும். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும் முத்துச்சாமி ராஜன்னாவுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதி தரப்பு வழக்கறிஞரால் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**<u>4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.22 20:35:41 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.